Vol.22 | No. 10 | October 2018

The Official Organ of the Diocese of Thuckalay



# இறையருள்

## Priests Religious Sangamam - 29.09.2018
## Prayerful Greetings to Jubilarians







Ongoing Formation for Junior Priests
13-14.09.2018



Bishop in Dialogue with TCYM Leaders
21.09.2018



Blessing - Presbytery at Thettivilai
28.09.2018

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No :10 OCTOBER 2018

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 06 |
| மறைக்கல்வி | 11 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 12 |
| சிறுமலர் இயக்கம் | 13 |
| இளையோர் இயக்கம் | 14 |
| வின்செண்ட் தே பவுல் | 18 |
| இல்வாழ்வு இயக்கம் | 20 |
| Birthdays and Feastdays | 20 |
| சமூக சேவை சங்கம் | 21 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 25 |
| சீனாய் தியான இல்லம் | 26 |
| கல்வி நிறுவனம் | 27 |
| செங்கோட்டைச் செய்திகள் | 32 |
| மறைவட்டச் செய்திகள் | 34 |
| Bishop’s Engagements | 36 |

## Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop’s House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/86/2018 30 September 2018

Dears,

We are entering the month of October – a month dedicated to the Holy Rosary. According to an account given by a fifteenth-century Dominican, Alan de la Roch, Mary appeared to St Dominic in 1206 after he had been praying and doing severe penances because of his lack of success in combating the Albigensian heresy. Mary praised him for his valiant fight against the heretics and then gave him the Rosary as a mighty weapon. She explained its uses and efficacy, and asked him to preach it to others. Since then, Catholics all over the world have prayed the Rosary fervently and received abundance of favours from God. In fact, early tradition attributes the defeat of the Albigensians at the Battle of Muret in 1213 to the Rosary. St Pius V attributed the great defeat of the Turkish fleet on the first Sunday of October 1571 to the fact that at the same time the Rosary confraternities at Rome and elsewhere were holding their processions. Accordingly, he ordered a commemoration of the Rosary to be made on that day. Two years later, Pope Gregory XIII allowed the celebration of a feast of the Rosary in churches having an altar dedicated to the Rosary. In 1671, Clement X extended the feast to all Spain. A second great victory over the Turks, who once, like the Russians, threatened the ruin of Christian civilization, occurred on 5 August 1716, when Prince Eugene defeated them at Peterwardein in Hungary. Thereupon, Pope Clement XI extended the feast of the Rosary to the whole Church. Today we celebrate the feast of Our Lady of the Rosary on 7 October.

Blessed Pope Paul VI in his Apostolic Exhortation Marialis Cultus, speaks about the devotional practice of reciting the Rosary. He calls the Rosary the compendium of the entire Gospel. I would like to present some pertinent points from this Exhortation for our reflection. The Rosary draws from the Gospel the presentation of the mysteries and its main formulas. As it moves from the angel's joyful greeting and the Virgin's pious assent, the Rosary takes its inspiration from the Gospel to suggest the attitude with which the faithful should recite it. In the harmonious succession of

Hail Mary's, the Rosary puts before us once more a fundamental mystery of the Gospel-the Incarnation of the Word, contemplated at the decisive moment of the Annunciation to Mary. The Rosary is, thus, a Gospel prayer, as pastors and scholars like to define it, more today perhaps than in the past.

As a Gospel prayer, centred on the mystery of the redemptive Incarnation, the Rosary is therefore a prayer with a clearly Christological orientation. Its most characteristic element, in fact, the litany-like succession of Hail Mary's, becomes in itself an unceasing praise of Christ, who is the ultimate object both of the angel's announcement and of the greeting of the mother of John the Baptist: "Blessed is the fruit of your womb" (Lk 1:42). We would go further and say that the succession of Hail Mary's constitutes the warp on which is woven the contemplation of the mysteries. The Jesus that each Hail Mary recalls is the same Jesus whom the succession of the mysteries proposes to us-now as the Son of God, now as the Son of the Virgin-at His birth in a stable at Bethlehem, at His presentation by His Mother in the Temple, as a youth full of zeal for His Father's affairs, as teacher proclaiming the advent of the Kingdom of God, as the Redeemer in agony in the garden, scourged and crowned with thorns, carrying the cross and dying on Calvary, risen from the dead and ascended to the glory of the Father to send forth the gift of the Spirit. As is well known, at one time there was a custom, still preserved in certain places, of adding to the name of Jesus in each Hail Mary reference to the mystery being contemplated. This was done precisely in order to help contemplation and to make the mind and the voice act in unison.

**Pope Paul VI lists out the elements of the Rosary:**

a) Contemplation in communion with Mary, of a series of mysteries of salvation, wisely distributed into three cycles. These mysteries express the joy of the messianic times, the salvific suffering of Christ and the glory of the Risen Lord which fills the Church. This contemplation by its very nature encourages practical reflection and provides stimulating norms for living. But with St John Paul II, the cycle has been enhanced in recent times when he added the mysteries of Light, which help to meditate on the significant events in the public ministry of Jesus.

b) The Lord's Prayer or Our Father, which by reason of its immense value is at the basis of

Christian prayer and ennobles that prayer in its various expressions.

c) The litany-like succession of the Hail Mary, which is made up of the angel's greeting to the Virgin (cf. Lk. 1;28), and of Elizabeth's greeting (cf. Lk. 1:42), followed by the ecclesial supplication, Holy Mary. The continued series of Hail Mary's is the special characteristic of the Rosary, and their number, in the full and typical number of one hundred and fifty, presents a certain analogy with the Psalter and is an element that goes back to the very origin of the exercise of piety. But this number, divided, according to a well-tried custom, into decades attached to the individual mysteries, is distributed in the three cycles already mentioned, thus giving rise to the Rosary of fifty Hail Mary's as we know it. This latter has entered into use as the normal measure of the pious exercise and as such has been adopted by popular piety and approved by papal authority, which also enriched it with numerous indulgences.

d) The doxology Glory be to the Father which, in conformity with an orientation common to Christian piety concludes the prayer with the glorifying of God who is one and three, from whom, through whom and in whom all things have their being (Rom. 11:36).

Each of these elements has its own particular character which, wisely understood and appreciated, should be reflected in the recitation in order that the Rosary may express all its richness and variety. The Rosary is an excellent prayer, but the faithful should feel serenely free in its regard. They should be drawn to its calm recitation by its intrinsic appeal. Let us inculcate this pious practice among our people and insist with them to pray the Rosary in their homes daily with great devotion.

In our Eparchy, we have the pious practice of conducting chain Rosary according to the uravium and this will be held on 21 October 2018. On 28 October, we shall organise the Rosary Rally. Besides, these I also request you, dear Fathers, to organise solemn recitation of the Holy Rosary for any ten days of the month of October in your respective parishes. Besides these practices, let us find ways and means to inculcate love for our Blessed Virgin Mary during this month of the Holy Rosary.

**CONCLUSION**

Dear Fathers, we are already in the month of October, which is dear to every Catholic. It is definitely a beautiful month in which we manifest our devotion to Mother Mary,

in a special way, by praying the Rosary. It is also a grace-filled time for receiving the showers of blessings from our heavenly Mother. Just like the blooming roses which beautify our gardens and refresh the air with their sweet fragrance, the presence of our blessed Mother beautifies our parish communities, removes every element of evil and spreads the fragrance of her maternal love, peace, serenity and harmony. Our Blessed Lord wants the heart of every priest to be a home of Mother Mary, where she is the mother, guide and help. Let us give her the rightful place and honour her with profound love and devotion especially on the feast of the Holy Rosary.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

✝George Rajendran SDB
Bishop of Thuckalay

---

## முக்கிய நிகழ்வுகள்

* **அருட்பணிப்பேரவை** அக்டோபர் 19 அன்று சங்கமத்தில் நடைபெறும். அருட்பணிப்பேரவை உறுப்பினர்களாக உள்ள அருட்தந்தையர்களும், உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளவும்.
* **மிஷன் லீக் பவனி** புனித குழந்தை தெரசாவின் திருநாளை முன்னிட்டு ஆண்டுதோறும் நடத்தப்படும் மிஷன் லீக் பவனி இவ்வாண்டு அக்டோபர் 7 அன்று திருத்துவபுரம் லத்தீன் ஆலயத்திலிருந்து தொடங்கி படந்தாலுமூடு திருஇருதய ஆலயம் வரை நடைபெறும்.
* **சங்கிலி செபமாலை** குடும்பங்களில் சங்கிலி செபமாலை அக்டோபர் 21 முதல் உறவிய அடிப்படையில் நடைபெற உள்ளது, அதைப்போன்று மரியாயின் சேனை இயக்கத்தினரின் சார்பில் செபமாலை திருப்பவனி அக்டோபர் 28 அன்று மாங்கரை தூய வியாகப்பர் ஆலயத்திலிருந்து தொடங்கி கிள்ளியூர் தேவமாதா ஆலயத்தில் நிறைவு பெறும்.
* **திருஉடை மற்றும் முதல் வார்த்தைப்பாடு** தக்கலை மாகாண FCC துறவற சபையில் பயின்று வரும் அருட்சகோதரிகள் சேம் பிரியா பளுகல், அபிஷா சேனங்கோடு, அனுஜா இராமநாதபுரம் ஆகியோரின் முதல் வார்த்தைப்பாடு மற்றும் திருஉடை அணிதல் திருநிகழ்வு அக்டோபர் 20 அன்று பிலாங்காலை சிறுமலர் மறைவட்ட ஆலயத்தில் நடைபெறும்.

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# ஆயர் திருமுகம்

Pastoral Letter No/GR/36/2018

இத்திருமுகம் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அன்னை மரியாவின் பிறப்பு நாளான செப்டம்பர் 8 ஆம் நாளை 8 நாட்கள் நோன்பு இருந்து திருச்சபையோடு இணைந்து நாம் பக்தியுடன் கொண்டாடினோம். அடுத்ததாக, பிறரன்பு பணியாளர்களின் சபையை நிறுவிய அருளாளர் ஓசானாமின் நினைவு நாளை செப்டம்பர் 9லும் புனித வின்சென்ட் தே பவுலின் நினைவு நாளை செப்டம்பர் 27 லும் நாம் கொண்டாடுகிறோம். இத்தருணத்தில் பிறரன்புப் பணியாற்றும் ஒவ்வொருவருக்கும் குறிப்பாக புனித வின்சென்ட் தே பவுல் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

1581 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24ஆம் நாள் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் தான் வின்சென்ட் தே பவுல். பிரான்ஸ் நாட்டில் பூய் என்ற கிராமம் தான் இவரது பிறந்த ஊர். தனது மாமாவைப் போலவே குருவாக எண்ணி, இறையியல் கற்று தன் 19ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார்;. ‘‘துயருறும் ஏழைகளில் இயேசுவைக் கண்டுணர்வதே தமது வாழ்வில் முக்கிய நோக்கம்’’ என வாழ்ந்தார். பல இளைஞர்களை ஒருங்கிணைத்து மறைபரப்பு பணியோடு ஏழைகளையும் அனாதைகளையும் பராமரிக்க பல இல்லங்களையும் நிறுவினார். அவர் தமது 80ஆவது வயதில் அதாவது 1660ஆம் ஆண்டு செப்டம்பர் 27இல் விண்ணில் பிறந்தார்.

அவரது பிறரன்புச் சேவையைப் பின்பற்றி அவர் பெயரிலேயே ஒரு சபையை நிறுவியவர் அருளாளர் பிரடெரிக் ஓசானாம். இவர் 1853ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8ஆம் நாள் விண்ணகம் புகுந்தார். மாதாவின் பிறப்பை செப்டம்பர் 8இல் திருச்சபை கொண்டாடுவதால் இவரின் திருநாளை செப்டம்பர் 9ஆம் நாள் புனித வின்சென்ட் தே பவுல் சபையின் நாளாக கத்தோலிக்க திருச்சபை கொண்டாடுகிறது.

பாரிஸ் பல்கலையில் சட்டக்கல்வி பயின்று வந்த இருபது வயதுடைய இளைஞரான பிரடரிக் ஓசானாம், தன்னோடு சக வயது

இளையோரையும் இணைத்து பேராசிரியர் பெய்லியுடன் ‘தருமசபை’ என்னும் பெயரில் ஒரு சபையை நிறுவினார். பிறரன்புப் பணியின் பாதுகாவலர் புனித வின்செண்ட் தே பவுலின் வாழ்வு அவரின் பணிகள், கோட்பாடுகள் ஆகியவற்றுடன் இ த் த ரு ம ச் ச பை யி ன் செயல்பாடுகள் ஒத்துப்போனதால் தாங்கள் தொடங்கிய சபைக்கு புனித வின்செண்ட் தே பவுல் சபை’ என பெயர் மாற்றம் செய்தனர். 1833ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் தொடங்கப்பட்ட இச்சபை உலகம் முழுவதும் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது என்றால் அதன் நோக்கமும் செயல்பாடுகளுமே அதற்கு காரணம். நமது மறைமாவட்டத்தி;ல் இச்சபையானது முதன் முதலில் சூசைபுரம் பங்கில் 812 1963 ல் அமரர் அருட்தந்தை தாமஸ் வீட்டுவேலிக்குன்னேல் அடிகளாரால் தொடங்கப்பட்டு இன்றளவும் சிறப்புடன் இறைப்பணியாற்றி வருகிறது.

கத்தோலிக்க திருச்சபை என்னும் மறையுடலின் உறுப்புக்களில் ஒன்றே புனித வின்செண்ட் தே பவுல் சபை, இச்சபையில் உறுப்பினராகி ஏழைகளுக்காக உழைப்பது என்பது உண்மையிலேயே ஓர் இறை அழைத்தலே.

“நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும் நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். (யோவா. 15:16). இறைவனே தனது பணிக்காக உங்களை தேர்ந்து எடுத்துள்ளார் என்ற உணர்வுடன் உங்கள் பணி அமைய வேண்டும். அதைப் போன்று இன்னும் ஏராளம் பிறரன்புப் பணிகள் பங்களவிலும் மறைமாவட்ட அளவிலும் பணியாளர்களுக்காகக் காத்துக் கிடக்கின்றது. இறைவன் மேலும் பலரை இப்பணிக்காக தெரிந்து கொள்ள இறைவனிடம் மன்றாடுவோம்.

உத்திரங்கோடு ஒசானம் உயர்கல்விமையத்தில் பல்வேறு பயிற்சிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தொலைக்கல்வி திட்டம், கணினி, தட்டச்சு, தையல் போன்ற பயிற்சிகளும் வுநுவு போன்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளும் னுடீவுநஉலீ உதவியுடன் நடைபெறும் திறன்வளர் பயிற்சியும் நடைபெற்று வருகிறது. அத்தோடு ஆசாரிப்பள்ளத்தில் தொடங்க இருக்கும் நோயாளிகளுக்கான ‘விடியல்’ என்ற திட்டம், ஏழை நோயாளிகளுக்கு உதவிட ‘காருண்யா நிதி உதவி திட்டம்’ போன்றவற்றை தமது இயல்பான பணிகளுடன் வின்செந்தியர்கள் செயல்படுத்தி வருகின்றனர்.

அதன் வாயிலாகவும் தக்கலை மத்தியப் பேரவையின் பிற செயல்பாடுகள் மூலமாகவும் அவர்கள் மறைமாவட்ட வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதை உணரமுடிந்தது. இவற்றிற்கு பங்கு தந்தையர்களும் பங்குமக்களும் ஆதரவு அளித்து வருவதில் மகிழ்ச்சியடைகிறேன். அத்தோடு இந்நிறுவனங்கள் மென்மேலும் வளர்ந்து வர ஆதரவு அளிக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்தாண்டு ஏற்பட்ட பேரழிவின் போதும், அதன்பின் வின்செந்தியர்கள் மூலமாக நடைபெற்ற நலத்திட்டங்கள் குறிப்பாக, இரண்டு இடங்களில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் ஆகியவற்றையும் நான் பார்வையிட்டேன். வருடந்தோறும் அக்டோபர் 2ஆம் நாள் 'தேசத்தோடு ஒருநாள்' என்னும் சிந்தனையில் செய்யப்படும் மருத்துவமனை சுத்தம் செய்யும் நிகழ்வுக்காகவும் பாராட்டுகிறேன். அதைப் போன்று கடந்த ஆண்டுகளில் செயல்படாமல் இருந்த பல கிளைச்சபைகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளதை அறிந்து மகிழ்கிறேன். இதே உணர்வுடன் கிளைச்சபை உறுப்பினர்களாகிய உங்கள் பணியும் அமைய வேண்டும். பங்கில் பிறரோடு ஏற்படும் சிறுசிறு புரிதல் குறைபாடுகளால் பிறரன்புப் பணிகள் பாதிப்புக்கு உள்ளாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக, பங்குத்தந்தையர்களோடு இணக்கமான நிலையை வின்செந்தியர்கள் கொண்டிருக்க வேண்டும். உங்கள் செயல்பாடுகள் பிறர் வெறுக்கும் நிலைக்கு உட்படக்கூடாது. அவ்வாறு நிகழுமாயின் "உங்களை எனக்குத் தெரியவே தெரியாது, நெறிகேடாகச் செயல்படுவோரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என வெளிப்படையாக அறிவிப்பேன்;" (மத்தேயு 7:23) என்ற இறைவார்த்தை நமக்கும் பொருத்தமானதாக அமைந்துவிடும். எனவே துயருறும் ஏழையில் இறைவனை கண்டுணர்ந்து அவருக்கு பணிவிடை செய்து வாழ்வதே நம் தலையாய கடமைகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டும்.

நம் ஒவ்வொருவரையும் தத்தம் தகுதிற்கேற்ப பணி செய்யவே இறைவன் அழைத்துள்ளார். நம்முள் ஏற்றத்தாழ்வுகள், பிரிவினைகள், முரண்பாடுகள், போட்டி பொறாமைகள், கலகங்கள் ஏற்படாவண்ணம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக வின்செந்திய உறுப்பினர்கள் சபையின் அடிப்படைத் தன்மை மாறாமல் செயல்பட வேண்டும். நல்ல எண்ணங்களை வளர்த்தி எடுக்க வேண்டும். பிறரை விமர்சனத்திற்குள்ளாக்கும் பார்வையிலிருந்து விடுபட்டு, தீமை செய்பவர்களுக்கும்

நன்மை செய்யும் நிலைக்கு நாம் உயர வேண்டும். காரணம் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நிலைக்கு உயர்த்தியவர் இறைவனே. “அவரே சிலரைத் திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளர்களாகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார். (எபே 4:11) ஆக, பிறரைக் குறித்து தீர்ப்பிட்டு நமது நேரத்தை வீணாக்காமல், நமக்கு ஒப்படைக்கப்பட்டவற்றில் நாம் உணர்வு உள்ளவர்களாக இருப்போம்.

கடந்த நாட்களில் நமது அண்டை மாநிலமான கேரளாவில் நமது சகோதரர்கள் பட்ட இன்னல்களை கண்ணுற்றோம். நமது சகோதரர்கள் துன்பப்படுவது நாம் வேடிக்கைப் பார்பதற்கல்ல. மாறாக ஓடிச்சென்று உதவுவதற்கு, அதற்காக அழைப்பு பெற்றவர்களே புனித வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள். நம்மில் பலரும் அவர்களுக்கு உதவி புரிந்தனர். செபம் மூலமாக உதவியவர்களும் ஏராளம் உண்டு. அனைவர்க்கும் நான் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் வின்செந்தியர் திருநாள் கொண்டாடும் போது எடுக்கப்படும் ஞாயிறு காணிக்கை வின்செந்திய பணிக்காக வழங்கப்படுகிறது. அதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இம்மாதம் (செப்டம்பா;) 30ம் நாள் ஞாயிறு அத்திருநாளை கொண்டாடும் போது வின்செந்தியர்கள் ஒப்புரவு திருவருட்சாதனம் பெற்று நற்கருணை உட்கொண்டு அன்றைய நாளை சிறப்பாகக் கொண்டாட உங்களை அன்போடு அழைக்கிறேன்.

மேலும், மத்தியசபையும், வட்டார சபைகளும் ஆண்டு விழாக்கள் கொண்டாடி, தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றன. ஆனால், கிளைச் சபைகள் பங்குத் திருவிழாவின் போது சிறு அறிக்கையை மட்டும் படிப்பதும் சிலவேளைகளில் ஆண்டறிக்கை சமர்பிக்காமல் இருப்பதையும் அறிகிறேன். இந்நிலை சபையின் வளர்ச்சி, சபைக்கு பிறரோடுள்ள தொடர்பு, சபை பணிகளின் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றைப் பாதிக்கும். எனவே, கிளைச்சபைகள் அனைத்தும் தத்தம் ஆண்டுக் கணக்கை மேல்சபைக்கு ஒப்படைத்த பின், மேல் சபை வழிகாட்டுதலுடன் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் ஆண்டுவிழாவை திட்டமிட்டு கொண்டாட அறிவுறுத்துகிறேன்.

துயருறும் ஏழையில் இறைவனை கண்டுணர்ந்து பணி செய்த புனித வின்சென்ட் தே பவுலின் பணியை இறைவன் ஏற்றுக்கொண்டது போல வின்செந்தியர் பணியும்

அமைய வாழ்த்துகிறேன். சபை நிறுவனர் அருளாளர் பிரடரிக் ஓசானம் அவர்களுக்கு விரைவில் புனிதர் பட்டம் பெற செபிப்போம், புனித வின்சென்ட் தே பவுல் வழியாக இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
15.09.2018

✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 23.09.2018 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.

**திருத்தொண்டுதள பணிக்குழு கூடுகை**

மறைமாவட்ட திருத்தொண்டு பணிக்குழு கூட்டம் செப்டம்பர் 1 அன்று காலை 10 மணிக்கு ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. இதில் விரிவாக்கப்பட்ட மறைமாவட்ட எல்லைக்குள் தேவைப்படுகின்ற திருத்தொண்டு பணிகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மறைமாவட்ட வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்களின் உதவியுடன் இப்பகுதியில் புதிய திருத்தொண்டுப் பணி செய்ய இயலும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

**உருவாக்கல் பயிற்சி**

இளங்குருக்களுக்கான உருவாக்கல் பயிற்சி செப்டம்பர் 13, 14 ஆகிய நாட்களில் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை கேம்லஸ் சச அவர்கள் பயிற்சியை நடத்தினார். அருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் மற்றும் திரு. எட்வின்சன் ஆகியோர் அமர்களை நடத்தினர். ஆயர் அவர்கள் செப்டம்பர் 13 அன்று இளங்குருக்களுடன் கலந்துரையாடினார். இப்பயிற்சி அருட்தந்தையர் பேரவையுடன் மாலை 4 மணிக்கு நிறைவு பெற்றது.

**பங்குத்தந்தை இல்லம் மந்திரிப்பு**

தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட பங்குத்தந்தை இல்லத்தை செப்டம்பர் 28 அன்று மாலை 5 மணிக்கு ஆயர் அவர்கள் மந்திரித்து திறந்து வைத்தார். இவ்வில்லம் 55 நாட்களில் கட்டிமுடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அருட்தந்தை ஜோமோன் அவர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் இவ்வில்லத்தில் தங்கி பணியாற்றுவார்.



# CATECHISM
# மறைக்கல்வி

"கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதனுக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும்" வெளிப்படும். (எபேசியர் : 4 . 24 )

**ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு**

படந்தாலுமூடு மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு செப்டம்பர் 2 ஞாயிற்றுக்கிழமை அன்று படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்தும், ஆறுகாணி மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு செப்டம்பர் 9 ஞாயிற்றுக்கிழமை ஆறுகாணி திருக்குடும்ப ஆலயத்தில் வைத்தும், தக்கலை பிலாங்காலை மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு செப்டம்பர் 16 ஞாயிற்றுக்கிழமை பிலாங்காலை சிறுமலர் ஆலயத்தில் வைத்தும் சூசைபுரம் மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு செப்டம்பர் 23 ஞாயிற்றுக்கிழமை சூசைபுரம் புனித சூசைப்பர் ஆலயத்தில் வைத்தும், நித்திரவிளை மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு செப்டம்பர் 30 நித்திரவிளை ஜெயமாதா ஆலயத்தில் வைத்தும் நடைபெற்றது. கருத்தரங்கானது பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை இயக்குநர் அருட்தந்தை சனில் பந்திச்சிறைக்கல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வகுப்புகள் அருட்தந்தை ஜினு தெக்கே தலக்கல் அவர்கள் விசுவாச பாரம்பரியம் பற்றியும், கத்தோலிக்க திருச்சபை எதற்காக அன்னை மரியாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பது பற்றியும் சிலை வழிபாடு குறித்தும் விவிலிய பகுதிகளை அடிப்படையாக கொண்டும் எளிய நடையில் அனைவருக்கும் புரியும் வகையில் மிகச் சிறப்பாக வகுப்புகள் நடத்தினர். பின் கருத்தரங்கானது சுமார் 4.00 மணியளவில் இயக்குநர் தந்தை அவர்களின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது. அந்தந்த மறைவட்டங்களில் நடைபெற்ற கருத்தரங்களில் அந்த மறைவட்டங்களில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் தேனீர் வழங்கப்பட்டது.

**நன்றி**

மறைவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு தகுந்த தயாரிப்புடன் வகுப்புகள் நடத்திய சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்களுக்கும், தெற்றியோடு புனித பவுல் ஆலய பங்கு அருட்தந்தை ஜினு தெக்கத்தலக்கல் அவர்களுக்கும்

எங்கள் இதயங்கனிந்த நன்றிகள். மேலும் இக்கருத்தரங்கிற்கு அனைத்து உதவிகளும் செய்து தந்த மறைவட்ட இயக்குநர்களுக்கும், செயலாளர்களுக்கும் அனைத்து பங்குகளிலிருந்தும் ஆசிரியர்களை அனுப்பி வைத்த பங்கு தந்தையர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும், வருகை புரிந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

**நடைபெறும் நிகழ்வுகள்**

| | |
|---|---|
| October 14 | Forane Level Bible Fest Writing Competitions<br>2.30pm - 4.30pm |
| October 27 | H.M meeting at 2.30 pm at Kalluvilai |
| October 28 | 1st Semester Examination (Std ½ - Std XII) |

அருட்தந்தை சனில் பந்திச்சிறக்கல்|இயக்குநர்

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ



## குழந்தை ஈசோ இயக்கம்

“உன்மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக”(மத் : 22-39 )

**கருத்தரங்கு**

குழந்தை ஈசோ இயக்க குழந்தைகளுக்கான கருத்தரங்கு 23/09/2018 அன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து இயக்குநர் தலைமையில் நடைபெற்றது.

**முக்கிய கருத்துக்கள்**

அருட்தந்தை ஜெபனேஷ் அவர்கள் வகுப்பு நடத்தினார்கள். இதில் பொய் சொல்லக் கூடாது, பிறருக்கு உதவி செய்ய வேண்டும், நன்றி சொல்ல வேண்டும். என மூன்று முக்கிய கருத்துக்களை பயிற்றுவித்தார். இடையிடையே செய்கைப் பாடல்கள், சிறு ஜெபங்கள், இடம் பெற்றன. மாலை 4.00 மணியளவில் இயக்குநர் தந்தையின் இறுதி ஆசீருடன் கருத்தரங்கு நிறைவுபெற்றது.

அருட்தந்தை ஜோமோன்
இயக்குநர்

**குருக்களுக்கான ஆண்டுதியானம்**

குருக்களுக்கான ஆண்டு தியானம் 30 செப்டம்பர் மாலை 6 மணிக்கு சங்கமத்தில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இத்தியானம் அக்டோபர் 3 அன்று அருட்தந்தையர்கள் பேரவையுடன் மாலை 5.30 மணிக்கு நிறைவு பெறும்.

சிறுமலர் MISSION LEAGUE



# மிஷன்லீக் இயக்கம்

**பொறுப்பாளர்கள் கூடுகை**

08.09.2018 அன்று மாலை 4.00 மணிக்கு மிஷன் லீக் இயக்க பொறுப்பாளர்கள் கூடுகை அருட்தந்தை ஜாண் ஜோசப் தலைமையில் அருட்தந்தை ஜோஸ் வயலில் முன்னிலையில் நடைபெற்றது. தூய ஆவி பாடலுடன் துவங்கிய கூட்டத்தில் இயக்குநர் தந்த அனைவரையும் வரவேற்க செயலர் அறிக்கை சமர்ப்பித்தார்.

**நடைபயணம்**

பின்னர் அக்டோபர் 7 ஆம் தேதி நடைபெற இருக்கும் விசுவாச நடைபயணத்தை சிறந்த முறையில் அமைக்க பல தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டு பொறுப்புகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

**தீர்மானங்கள்**

- நடைபயணம் திருத்துவபுரம் மூவொரு திருத்துவ பேராலயத்தில் தொடங்கி , படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் நிறைவுசெய்தல்.
- மையசிந்தனை இயற்கை சீற்றங்களில் சிறு அப்போஸ்தலர்களின் பணி
- நடைபயணம் ஒருங்கமைப்பு செய்தல் அருட்தந்தை தோமஸ் ஜெபனேஷ் அவருடன் இணைந்து அனைவரும் ஒத்துழைத்தல்
- சிறுமலர் இதழின் வளர்ச்சிக்காக ஒரு குழு தேர்வு செய்தல்
- தேசிய ஆண்டுவிழாவை மிக சிறப்பாக நடத்த ஒத்துழைத்தல்
- எல்லா உறுப்பினர்களும் கேரளா மக்களுக்கு உதவுதல்

மேலும் இக்கூட்டத்திற்கு தேசிய தலைவர், அமைப்பாளர் ஆகியோர் வருகை தந்து தேசிய ஆண்டுவிழா கொண்டாடுவதன் நோக்கம், வளர்ச்சி, தக்கலை மறைமாவட்டம் தேர்ந்தெடுப்பதன் காரணம் என கருத்துக்கள் கூறினார். திரு. ஞானதாஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற இறுதி ஜெபத்துடன் இனிதே நிறைவுபெற்றது.

அருட்தந்தை ஜாண் ஜோசப்|இயக்குநர்

---

**திருச்சபையின் அமைதிக்காக ஆராதனை**

மறைமாவட்ட அருட்சகோதரிகள் இந்திய திருச்சபையின் அமைதி மற்றும் இணக்கத்திற்காக கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் செப்டம்பர் 21 காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை ஒருநாள் ஆராதனை மற்றும் செப வழிபாடு செய்தனர்.

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

இளமை மனிதனின் இரண்டாவது பிறப்பு ....
(வில்லியம் பிராங்கோ)

**தலைவர்களுக்கான பயிற்சி**

01-09-2018 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் மறைமாவட்ட மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்களின்



கூடுகையானது தக்கலை சங்கமத்தில் ஆரம்பமானது.

**துவக்கம்**

இந்நிகழ்வானது தக்கலை இளையோர் இயக்க தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினராக அருட்தந்தை அனலின் அவர்கள் கலந்துக் கொண்டார்கள். இளையோர் இயக்க தலைவர் ஜினோ அவர்கள் அனைவரையும் வரவேற்றார். பின் இயக்குநர் தந்தை அவர்களால் தொடக்கவுரை ஆற்றப்பட்டது.

**நோக்கம்**

இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமானது தலைவர்களுக்கான கலந்துரையாடல் மற்றும் மறைமாவட்ட கலைக் குழுவிற்கான பறைபயிற்சி

**பயிற்சிகள்**

இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி ஆனது அருட்தந்தை அனலின் அவர்களால் வழங்கப்பட்டது. இளைஞன் என்பவன் யார். அவர்கள் இச்சமூகத்தில் சந்திக்கும் சவால்கள் மற்றும் இந்த சமூகத்திற்கும் திருச்சபைக்கும் அவர்கள் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி இந்த பயிற்சி வகுப்பு அமைந்தது. வகுப்பானது கலந்துரையாடலுடன் கூடிய சிந்திக்க தூண்ட கூடிய செயல்பட ஆர்வம் காட்ட கூடிய ஒன்றாக அமைந்தது.

**பறை பயிற்சி**

மறைமாவட்ட கலைக் குழுவிற்கான பறை பயிற்சி ஆனது காலை 10.00 மணிமுதல் மாலை 3.30 மணிவரை களரி கலை குழு ஒருவரால் பயிற்சி அளிக்கப்பட்டது.

**கலந்துரையாடல்**

மதிய உணவிற்கு பின் மறைமாவட்ட மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்களுக்கான கூட்டம் இயக்குநர் தந்தை தலைமையில் நடைபெற்றது. இதில் தக்கலை கத்தோலிக்க இளையோர்கள்

தக்கலை மறைமாவட்டத்திடமும், பங்கு தளங்களிலும் தாங்கள் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்பை குறித்து விவாதிக்கப்பட்டு அறிக்கையாக்கப்பட்டது.

**கலைப்போட்டி**

இளைஞர் இயக்க கலைப் போட்டிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. தலைவர்கள் பரிந்துரைத்த போட்டிகள் மற்றும் போட்டி விதிமுறைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது.

**மறைமாவட்ட குழு**

இதற்கு பின் மறைமாவட்டக் குழுவிற்கான கூட்டம் கூடுகையில் போட்டி விதிமுறைகள் மற்றும் போட்டிகள் உறுதி செய்யப்பட்டன. பின் அறிக்கையாக்கப்பட்ட இளையோர்களின் எதிர்பார்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் வரும் நாட்களில் இளையோர் இயக்க செயல்பாடுகள் குறித்தும் ஒவ்வொரு மறைவட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**நிறைவு**

இளையோர் இயக்க துணைத் தலைவர் அபிமோள் நன்றிக் கூற மாலை 5.00 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

**SMYM**

உலகெங்கும் பரந்து விரிந்து இருக்கும் சீரோ மலபார் கத்தோலிக்க இளைஞர்களை ஒரே அணியாக சேர்க்கும் புது முயற்சி தான் SMYM

**தமிழ்நாடு ரீஜினல்**

ஏற்கனவே ஷிவிசீவி அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தமிழகத்தில் இருக்கும் சீரோ மலபார் மறைமாவட்டங்களான இராமநாதபுரம், ஒசூர் மற்றும்



தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்கங்களை ஒன்றிணைக்கும் நோக்கில் ஷிவிசீவி தமிழ்நாடு ரீஜினல் தொடக்க விழாவானது 16-09-2018 ஞாயிற்றுக்கிழமை அன்று இராமநாதபுரம் மறைமாவட்டத்தில் வைத்து நடத்தப்பட்டது.

**பங்கேற்பு**

இவ்விழாவில் நமது மறைமாவட்டத்தின் சார்பாக இளைஞர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களும் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் 6 பேரும் கலந்துக் கொண்டார்கள்.

**தொடக்க விழா**

தொடக்கவிழாவிற்கு முன்னதாக நடத்தப்பட்ட விவாதத்தில் தொடர்ந்து தமிழ்நாடு அளவிலான SMYM இயக்கத்தை எப்படி செயல்படுத்த வேண்டும், மூன்று மறைமாவட்ட இளைஞர்களை எப்படி ஒன்றிணைக்க வேண்டும் போன்றவை பற்றி

கலந்துரையாடப்பட்டது. மேலும் பொதுக்கூட்டத்தில் நம் மறைமாவட்ட இளைஞர் இயக்கம் சார்பாக தலைவர் ஜினோ அவர்கள் வாழ்த்துக்களையும் நம் கருத்துக்களையும் தெரிவித்தார். SMYM இளைஞர்களை ஒன்றிணைக்கும் பணியை தொடர்ந்து ஆற்றும் என்ற கருத்துடன் தொடக்கவிழா நிறைவுபெற்றது.

**ஆயருடன் ஒருநாள்**

தக்கலை இளைஞர் இயக்க இளையோர்களின் எதிர்பார்ப்புகளை ஒரே குரலாய் எழுப்பும் ஓர் நிகழ்வாக "ஆயருடன் ஒருநாள்" என்னும் ஒருநாள் இளையோர் கூடுகையானது 21-09-2018 வெள்ளிக்கிழமை



அன்று சங்கமத்தில் வைத்து நடத்தப்பட்டது.

**தொடக்கவிழா**

நிகழ்வானது காலை 9.30 மணியளவில் பெயர்பதிவுடன் ஆரம்பமானது. பின் தொடக்க விழாவானது இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையிலும் தலைவர் ஜினோ அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. துணைச் செயலர் ஜெஸின் அனைவரையும் வரவேற்றார்

**கலந்துரையாடல்**

இயக்குநர் தந்தை அவர்கள் திருச்சபையில் இளையோர்கள் மற்றும் இளைஞர்கள் வேலைவாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடினார். பின் இளைஞர்களின் குரல் ஆயருடன் என்ற அமர்வுக்கு ஆயத்தம் செய்யும் வகையில் பொறுப்பாளர்கள் மறைவட்டத்தின் அடிப்படையில் குழுக்களாக பிரிக்கப்பட்டு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

**ஆயர்**

பிற்பகல் நிகழ்விற்கு தலைவராக ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் வருகை புரிந்தார். நிகழ்ச்சியில் தலைவர் ஜினோ அனைவரையும் வரவேற்றார். ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான அறிக்கை செயலர் பபிஷா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. பின் இளைஞர்களின் கேள்விகளும் நம் ஆயர் அவர்களின் பதில்களும் விறுவிறுப்பாக அமைந்தன.

**எதிர்பார்ப்புகள்**

மறைமாவட்ட இளையோர்கள் தக்கலை மறைமாவட்டத்திடமும் அவர்கள் தத்தம் பங்குகளிலும் எதிர்பார்ப்பவை பற்றி ஆயர் அவர்களுடன் வினா எழுப்பினார்கள். ஆயர் அவர்கள் அனைவரின் கேள்விகளுக்கும் மிகப் பொறுமையாகவும் பொருத்தமாகவும் விடை

அளித்தார். மேலும் ஆயர் அவர்கள் கூறுகையில் தக்கலை மறைமாவட்ட இளைஞர்களிடம் தமக்கும் எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கின்றன என்றும் அவற்றை நிறைவேற்றும் அளவுக்கு இளையோர்கள் வளர்ந்து வருவதாகவும் கூறினார்கள்.

**கோரிக்கை மனு**

பின்னர் கோரிக்கைகள் எழுத்து வடிவில் அனைவரின் கையொப்பம் இட்டு ஆயர் அவர்களிடம் வழங்கப்பட்டது. இளையோர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தார். மறைமாவட்டம், மறைவட்ட மற்றும் பங்கு அலகு பொறுப்பாளர்கள் என 80 பேர் கலந்துக் கொண்டார்கள். பின்னர் ஆயருடன் புகைப்படம் எடுத்து அத்தனை இளைஞர்களும் மகிழ்ந்தனர்.

**நன்றி**

எங்கள் எளிய அழைப்பை ஏற்று வருகை தந்து எங்கள் கோரிக்கைகள் ஏற்று எப்பொழுதும் இளையோர் இயக்கத்திற்கு உறுதுணையாய் இருக்கும் பாசமிகு ஆயர் அவர்களுக்கும் இளைஞர்களின் தேவைக்காக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்து எங்கள் வளர்ச்சிக்காய் என்றும் உழைக்கும் இயக்குநர் தந்தை அவர்களுக்கும் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் நன்றி.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

**காரோடு**

முதுமை காரணமாகவும் கவனிக்க ஆள் இல்லாமல் இருப்போர்க்கு உதவியாக திகழும் வள்ளவிளை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்திற்கு 16-09-2018 அன்று காரோடு இளையோர் இயக்கம் சார்பாக பார்வையிட்டு மதிய உணவு வழங்கி மகிழ்ந்தனர். முதியோர்கள் தங்கள் வாழ்க்கையில் நடந்த நெகிழ்ச்சியான நினைவுகளை இளைஞர்களிடம் பகிர்ந்து கொண்டனர்.


**கண் மருத்துவ முகாம்**

30-09-2018 அன்று மஞ்சாலுமூடு மறைவட்டம் சார்பாக காரோடு ஆலய வளாகத்தில் காரோடு இளையோர்கள் முன்னிலையில் இலவச கண் பரிசோதனை மருத்துவ முகாம் அருட்தந்தை ஜேம்ஸ் கானாகாலில் ஆசீருடன் நடைபெற்றது. இளையோர் இயக்க தந்தை பார்வையிட்டு இளையோர்களை பாராட்டினார்.




இம்முகாமில் 80 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துக் கொண்டு பயன் பெற்றார்கள். இம்முகாமினை பெஜான்சிங் கண் மருத்துவமனை சிறப்பாக நடத்தியது.

பபிஷா ஜூலிட்,
செயலர்



VINCENT-DE-PAUL
வின்செந்தியர்



# தக்கலை மத்திய சபை

**இளைஞர் கூடுகை**

தக்கலை மத்திய சபையின் இளைஞர் கூடுகையானது 09-09-2018 அன்று அருளாளர் பிரடரிக் ஒசானாம் திருநாள் அன்று உத்திரங்கோடு ஒசானாம் உயர்க்கல்வி மையத்தில் வைத்து சுமார் 2.00 மணியளவில் தொடக்க ஜெபத்துடன் ஆரம்பமானது. மத்திய சபை இளைஞர் பிரதிநிதி சகோ. ஷாஜன் அனைவரையும் வரவேற்று பேசினார். அதனை தொடர்ந்து குத்துவிளக்கு ஏற்றப்பட்டது. தொடர்ந்து மத்திய சபை தலைவர் சகோ. ஐயாதுரை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து தேசிய சபை துணைத் தலைவர் சகோ. சவுந்தர ராஜன் அவர்கள் சபையின் தொடக்க காலம் முதல் தற்போதைய நிலை வரையிலான செய்திகளை விளக்கி கூறினார்.

**சிறப்புரைகள்**

சூசைபுரம் வட்டார சபைத் தலைவர் சகோ. சோனிக் ரீகன் அவர்கள் ஒசானாம் இளைஞர்களின் முன்மாதிரி என்னும் தலைப்பில் உரையாற்றினார். தொடர்ந்து பள்ளிக்கோணம் இளைஞர் கிளைச்சபையின் சகோ. மோனிஷா அவர்கள் புனித வின்சென்ட் தே பவுல் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறினார். பின் மத்திய சபை செயலர் சகோ. எட்வின்சன் அவர்கள் கூட்டமும், வீடு சந்திப்பும் சபையின் இரு கண்கள் என்ற கருத்தை மையமாக கொண்டும் வாறுதட்டை சேர்ந்த சகோ. ஜெனலெட் ராஜ் வின்செந்திய பணி கடவுளின் அழைப்பு என்னும் தலைப்பிலும் உரையாற்றினார்.

**விவாதம்**

தொடர்ந்து தியாகச் சுடர் இதழின் ஆசிரியர் சகோ. ராபின் ஜோசப் தலைமையில் குழு விவாதம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து பிலாங்காலை வட்டார சபை இளைஞர் பிரதிநிதி சகோ. மெரின் சஜிதா நன்றியுரை கூறினார். பின் இறுதி ஜெபத்துடன் விழா இனிதே நிறைவுபெற்றது. விழா ஏற்பாடுகளை ஒசானாம் உயர்க்கல்வி நிலைய ஆசிரியர் சகோ. ஆக்னல் அவர்கள் செய்திருந்தார்.

**பாலப்பள்ளம் பொன்விழா**

புனித வின்சென்ட் தே பவுல் சபையின் 50 ஆம் ஆண்டு விழா 16-09-2018 ஞாயிறு அன்று கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. பொன்விழா நன்றி திருப்பலி அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருப்பலியில் காணிக்கை பவனி, சிறப்பு மன்றாட்டுகள் இடம் பெற்றன.

**நிகழ்ச்சிகள்**

மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள்

தலைமையில் சுமார் 11.30 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தக்கலை மத்திய சபைத் தலைவர் சகோ. ஐயாதுரை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மறைமாவட்ட திருத்தொண்டு பணிக்குழுவின் செயலரும் கிளைச்சபையின் முதல் உறுப்பனராகிய சகோ. மரியதாஸ் அவர்களுக்கு பாராட்டும் நினைவு பரிசும் வழங்கப்பட்டது. அவரது அனுபவ பகிர்வும் நடைபெற்றது. சூசைபுரம் வட்டார முதல்வர் பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ் அவர்கள் பொன்விழா மலர் வெளி யிட மறைமாவட்ட பொருளாளர் பேரருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

**வாழ்த்துரை**

பொன்விழா நினைவு நிதி, நலத்திட்ட உதவிகள் வழங்குதல் நிகழ்வுகள் அரங்கில் நடைபெற்றன. உறுப்பினர்களுக்கும் துணை உறுப்பினர்களுக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. இந்திய தேசிய சபை உறுப்பினர் சகோ. சௌந்தர ராஜ், தக்கலை மத்திய சபை துணை உறுப்பினர் சகோ. மணிவண்ணன், சூசைபுரம் வட்டார சபைத் தலைவர் சகோ. சோனிக் ரீகன் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன.

**அன்பின் விருந்து**

கிளைச்சபை தலைவர் சகோ. ஜஸ்டின் தாஸ் அவர்கள் நன்றி கூறினார். புனித ரீத்தா கிளைச்சபையினரின் தொடக்க ஜெபமும் புனித இக்னேசியஸ் லயோலா கிளைச்சபையினரின் இறுதி ஜெபமும் நடைபெற்றது. நிகழ்ச்சிகளை சகோ. எட்வின்சன் அவர்கள் தொகுத்து வழங்கினார். இறுதியாக அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

**திட்டம் வழங்குதல்**

பாலப்பள்ளம் புனித ரீத்தா கிளைச்சபை சார்பில் திட்டம் வழங்குதல் நிகழ்வு 16092018 ஞாயிறு மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ரூ. 3000 வீதம் 16 நபர்களுக்கு ரூ. 48000 வழங்கப்பட்டது. பாலப்பள்ளம் கிறிஸ்து ராஜா கிளைச்சபை சார்பில் திட்டம் வழங்குதல் நிகழ்வு 23-09-2018 ஞாயிறு காலை சுமார் 9.30 மணிக்கு நடைபெற்றது. ரூ. 3000 வீதம் 14 நபர்களுக்கு ரூ. 42,000 வழங்கப்பட்டது.

**நிறுவனர், பாதுகாவலர் விழா**

பிறரன்பு பணிகளின் பாதுகாவலரான புனித வின்சென்ட் தே பவுல் (செப்டம்பர் 27) மற்றும் அருளாளர் பிரடரிக் ஒசானாம் (செப்டம்பர் 09) ஆகியோரின் விழா முஞ்சிறையில் செப்டம்பர் 27 ஆம் தேதி மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் சிறப்பு திருப்பலி, ஒப்புரவு வழிபாடு, நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அனைத்து வின்செந்தியர்களும் கலந்துக் கொண்டனர்.

சகோ. ஷாஜன் | செய்தி தொடர்பாளர்



FAMILY APOSTOLATE

குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது மற்றும் மன நோயாளிக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் செவ்வாய், புதன், வியாழன், ஆகிய நாட்களில் காலை 10 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை செயல்படுகிறது. மது மற்றும் மன நோய்க்கு சிகிட்சை பெற்ற நோயாளிகள் நலன் பெற்றுள்ளனர். தற்போது இங்கு ஆற்றுப்படுத்தலுக்காக வந்துள்ள குடும்பங்கள் நல்ல மாற்றம் பெற்று நன்முறையில் இருக்கின்றனர். இம்மையமானது இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் தலைமையில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது.

**திருமண பயிற்சி வகுப்பு**

இருமாதத்திற்கு ஒருமுறை மூன்றாவது வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு, ஆகிய நாட்களில் பயிற்சிகள் நடைபெறும். இப்பயிற்சி வகுப்புகள் இளையோர்க்கு பயன் உள்ளதாகவும், குடும்ப வாழ்க்கை நன் முறையில் அமையவும் இப்பயிற்சி உதவுகிறது. இப்ப யிற்சி நடத்துபவர்கள் பெயர் பெற்ற ஆசிரியர்கள், மருத்துவர், பேரருட்தந்தையர்கள் மற்றும் அருட்தந்தையர்களாலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இறுதி நாள் ஞாயிறு 2 மணிக்கு பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெறும். ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பயிற்ச்சியில் 20 இளையோர்கள் பங்கெடுத்தனர்.

அக்டோபர் மாதம் 26102018 காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 28-10-2018 மாலை 4.00 மணிக்கு நிறைவுபெறும். பயிற்சி கட்டணம் ரூ. 750 ஆகும்.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்
இயக்குநர்

## BIRTHDAYS | FEASTDAYS OF REV FATHERS

BIRTHDAY : October 27

**REV.FR. AUGUSTINE THALODIL**

FEASTDAY : October 18

**REV.FR. LUKA KOLLAMPARAMPIL CMI**

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**முப்பெரும் விழா**

புஷ்பா பாலர் பள்ளி ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மரியா அவர்களின் துறவற திருநிலைப்பாட்டின் பொன்விழா, பாலர் பள்ளி ஒருங்கிணைப்பாளர் பணியிலிருந்து பிரியாவிடை மற்றும் கேரளாவில் வெள்ளம் பாதித்த மக்களுக்கு அரும்பணியாற்றிய தன்னார்வலர்களுக்கு பாராட்டு விழா ஆகிய விழாக்கள் கல்லுவிளை KKSSS அரங்கத்தில் செப்டம்பர் 8 ஆம் தேதியன்று தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

**அருட்சகோதரி**

தன்னுடைய 46 வருட செயல்பாடுகளால் வழிகாட்டியாக திகழும் அருட்சகோதரி மரியா அவர்கள் எளிமையான அணுகுமுறை அமைதியான உருவம், எப்போதும் புன்னகை, வேகமான செயல்பாடு என தாயின் செயல்பாடுகள் ஒருங்கே அமைய பெற்றவர். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் பேசும்போது 40 வருடங்களாக அருட்சகோதரியை பார்க்கிறேன். சுமார் 46 வருடங்களுக்கு முன்பு அருட்தந்தை மஞ்சேரிக்களம் அவர்களால் துவங்கப்பட்டு அருட்சகோதரி அவர்களை ஒருங்கிணைப்பாளராக நியமித்தார். அன்று அவர் அளித்த அதே வேகத்தோடு செயலாற்றி வருகிறார். கிராம புற மாணவர் கல்வியின் அடித்தளமே இந்த பாலர் பள்ளி என்றால் மிகையில்லை என கூறினார்.

**கலை நிகழ்ச்சிகள்**

இடையிடையே பாலர் பள்ளி ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியர் லீலா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் KKSSS இயக்குநர் தந்தை சஜி எலம்பசேரி, துணை இயக்குநர் தந்தை வினு D ஜோசப், மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அலுவலகப் பணியாளர்கள், பாலர் பள்ளி சிரியர்கள்,களப்பணியாளர்கள் மற்றும் ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டார்கள்

**விருது**

எல்லோர் மனதிலும் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். ஆனால் வேடிக்கை பார்க்காமல் உதவி செய்பவரே தன்னார்வலர்கள். கேரளத்தில் வெள்ளம் பாதித்த மக்களுக்கு உதவி செய்த

தன்னார்வலர்களுக்கு மேதகு ஆயர் அவர்கள் விருதை வழங்கி சிறப்பித்தார்.

**அன்போடு தக்கலை**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் ஒருங்கிணைப்பில் 30 குமரி மைந்தர்கள் கொண்ட தொழில்நுட்ப குழுவும் 6 பேர் கொண்ட மருத்துவ குழு கேரளாவிற்கு சென்றனர். கேரளாவில் இன்னும் சில பகுதிகள் யாரும் தொடர்பு கொள்ள முடியாததாகவும், இதுவரை எந்த விதமான உதவியும் கிடைக்காத இடங்கள் உள்ளது. இவ்வாறு மறுகட்டமைப்பு, பொருளாதாரம், உடல்ரீதியாகவும் கடுமையான பிரச்சனைகளை எதிர்கொள்ளும் ஒரு கிராமம் தான் குட்டநாடுக்கு உட்பட்ட தெக்கேகரை கிராமம். இங்கு தண்ணீர் பல நாள் தேங்கி நிற்பதால் தொற்று நோய் பரவுகிறது. வீடு மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் பழுது ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கிராமத்தை கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் முழுமையாக மறுகட்டமைதற்காக செப்டம்பர் 1 மற்றும் 2 ஆகிய நாட்களில் முதல் கட்டமாக குழுவானது அந்த பகுதியில் வீடு, அரசு கட்டிடம் மற்றும் பொது இடங்களை சுத்தப்படுத்தி மின்சார பழுது, மின்பொருட்கள் பழுது போன்றவை சரி செய்தனர்.

**குழுக்கள்**

செப்டம்பர் 1 ஆம் தேதி சமூக சேவை சங்கத்தின் துணை இயக்குநர் தந்தை வினு D ஜோசப் தலைமையில் ஒயரிங் வேலைக்காக 5 குழுக்களும், பிளம்பிங் வேலைக்காக 3 குழுக்களும், சுத்தப்படுத்தும் வேலைக்காக 3 குழுக்களும் சேர்த்து 11 குழுக்ள் அமைக்கப்பட்டது. அன்றைய நாள் புனித ஜான்ஸ் ஆலயம் முதல் முக்கொம்பு வரை (1 முதல் 8 வார்டு) மக்களுக்கு ஒயரிங், பிளம்பிங் மற்றும் சுத்தப்படுத்துதல் போன்ற உதவிகளை 45 வீடுகளுக்கு வழங்கப்பட்டது. செப்டம்பர் 2 ஆம் தேதி இக்குழுவானது (9 முதல் 13 வார்டு) மக்களுக்கு ஒயரிங், பிளம்பிங் மற்றும் சுத்தப்படுத்துதல் போன்ற உதவிகளை 30 வீடுகளுக்கு செய்து கொடுத்தது. செப்டம்பர் 2 ஆம் தேதி காலை புனித ஜான்ஸ் ஆலயம் அருகில் 14 முகாம் அமைத்து சுமார் 475 வீடுகளுக்கு நிவாரண பொருட்கள் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார். மருத்துவ முகாமானது காலை 8 மணி முதல் 1 மணி வரை Dr. விஜய் தலைமை யிலான மருத்துவக் குழுவில் இரண்டு நர்ஸ் மற்றும் மூன்று உதவியாளர்களுடன் தெக்கேகரை கிராமத்தில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமை ஆயர் அவர்கள் தொடங்கி வைத்தார். 88 பேர் பயனடைந்தனர். பின்பு 1.30 மணி முதல் 7.00 மணி வரை புன்னம்குன்னத்து கிராமத்தில்

நடைபெற்ற மருத்துவ முகாமில் 75 பேர் பயனடைந்தனர். கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் செயல்பாடுகளில் இந்நிகழ்வு ஓர் மைல் கல் "துன்பத்துக்கு தோள் கொடுப்போம் குட்டநாடு மக்களுக்கு உதவிகரம் நீட்டுவோம்" தெக்கேகரை கிராமத்தை மறுகட்டமைப்போம்.

**மாடு வளர்த்தல்**

ஆடு, மாடு கோழிகளின் உணவு ஊட்டமுறை எனும் ஒரு நாள் பயிற்சி முகாம் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக கல்லுவிளை அரங்கத்தில் வைத்து செப்டம்பர் 27 ஆம் தேதி நடைபெற்றது இதில் நெல்லை விலங்குகள் பல்கலைகழக பேராசிரியர் மருத்துவர் சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. அவர் கோழி வளர்த்தல் என்பது மிகவும் எளிமையாக நாமே வீட்டிலிருந்த படியே செய்யலாம் சரியான உணவு மற்றும் இடவசதியை முறையாக பயன்படுத்தினால் அதிக இலாபம் ஈட்டலாம். கோழிகளை எளிதாக தாக்கும் நோய்களான ஆந்திராஸ், இரத்த கழிச்சல் போன்ற நோய்களையும் அதனை தடுக்கும் முறைகள் பற்றியும் பயிற்சி அளித்தார். இதில் சிறப்பு விருந்தினராக பறக்கை விலங்குகள் பல்கலைகழக பேராசிரியர் மருத்துவர் ரவிமுருகன் அவர்கள் கலந்து கொண்டு பேசும் போது மிகவும் எளிய முறைகளில் இலாபம் ஈட்டும் தொழிலாக உள்ளது. பசு இனம் நாட்டு இனம், கலப்பினம் என இருவகைப்படும். கலப்பினம் பசு வகையான ஜெர்சி மற்றும் காங்ரெஜ் இனமாடுகள் அதிக பால் கொடுக்கும் திறன் உடையது. இதில் குறிப்பாக உணவு முறைகளான கோ 1 மற்றும் கோ 2 கீரை வகைகள், மாடுகளை தேர்ந்தெடுக்கும் முறைகள், கொட்டகை அமைக்கும் முறை , உணவு முறைகள், வயது கண்டறிதல் மற்றும் மாட்டினை எளிதாக தாக்கும் நோய்களான அடைப்பு, கருசிதைவு நோய், மடிசூலை கோமாரி போன்ற நோய்களையும் அதனை தடுக்கும் தடுப்பூசி பற்றியும் பயிற்சி அளித்தார். இம்முகாமில் 40 நபர்கள் கலந்து கொண்டனர்.

**வாழ்வாதார மேம்பாடு**

மனோஸ் இந்தியா உதவியுடன் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பாக வாழ்வாதார மேம்பாடு என்ற திட்டத்தின் துவக்க விழா கல்லுவிளை KKSSS அரங்கத்தில் வைத்து செப்டம்பர் 30 ஆம் தேதி நடைபெற்றது. சமூக சேவை சங்கத்தின் துணை இயக்குநர் தந்தை வினு D ஜோசப் அவர்கள் வரவேற்புரை கூறினார். சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை சஜி எலம்பசேரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தேசிய போலிஸ் கல்லூரி துணை இயக்குநர் சதீஷ் பீனோ IPS கலந்து

கொண்டு பேசும் போது பெண்கள் ஆண்களுக்கு சமம் அவர்கள் இல்லையென்றால் உலகம் சரியாக இயங்காது அந்த வாய்ப்பை இந்த நிறுவனம் தந்துள்ளது என கூறினார். வாழ்த்துரை வழங்கிய தேசிய போலிஸ் கல்லூரி துணை இயக்குநர் அஜிதா பீனோ IPS கலந்து கொண்டு பேசும் போது ஆண்களை போன்று சமமாக மதிக்க வேண்டும் அந்த சமத்துவத்தை ஏற்படுத்த பொருளாதாரத்தில் பெண்கள் முன்னேற வேண்டும் அதற்கு இந்த திட்டம் உதவியாக இருக்கும் எனவும் தன்னுடைய வேலையில் பெண்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். பின்பு திட்ட பயனாளி 200 நபர்களுக்கு சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை சஜி எலம்பசேரி அவர்கள் வழங்கினார்கள் இதில் குழு உறுப்பினர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் பாலர் பள்ளி ஆசிரியர்கள், களப்பணியாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்
இயக்குநர்

---


### தேவ மாதா தையல் மையம் அர்ச்சிப்பு

சமுதாயத்தில் ஏழை பெண்களின் நல்வாழ்வுக்காக பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் முயற்சியால் கிள்ளியூர் தேவமாதா ஆலய வளாகத்தில் தையல் மையம் கட்டப்பட்டு செப்டம்பர் 24-09-2018 அன்று ஆயர் அவர்களால் அர்ச்சித்து திறந்து வைத்து தலைமையுரை வழங்கினார். இந்நிகழ்வில் பேரருட்தந்தை டென்சி முண்டுநடக்கல், அருட்தந்தை அஜீஷ் அட்டியில் முன்னாள் கிள்ளியூர் பேரூராட்சி தலைவர் திரு. ராஜரெத்தினம், முன்னாள் கிள்ளியூர் 1 வது வார்டு உறுப்பினர் திரு. ஞானசேகரன் ஆகியோர் கலந்துக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

### கிறிஸ்மா மற்றும் புலரி என்டர்பிரைசஸ் தொடக்கவிழா

தற்போது படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் செயல்படும் கிறிஸ்மா வழிபாட்டு பொருட்கள் மையம் படந்தாலுமூடு அரசுபேருந்துமனை எதிர்புறம் இடமாற்றம் செய்யப்பட உள்ளது. 3000 சதுரஅடியில் காட்சியகத்துடன் கூடிய வழிபாட்டு பொருட்களும் மற்றும் அதே இடத்தில் புலரி என்டர்பிரைஸ் அலுவலகமும் பள்ளி, கல்லூரிகளுக்கான பொருட்களும் விற்பனைக்கு வரவிருக்கின்றன. இதன் தொடக்க விழா ஆயர் அவர்கள் தலைமையில் அக்டோபர் 7 அன்று நடைபெறும்.

# அருட்சகோதரர்களிடமிருந்து...




**விடுமுறை**

குருத்துவ கல்லூரியில் பயின்று வரும் உயர் குருத்துவ கல்லூரி அருட்சகோதரர்கள் தங்கள் முதல் தேர்வை முடித்து விட்டு ஒருவார விடுமுறைக்காக வீடு திரும்பியுள்ளனர்.

**குந்நோத்**

குந்நோத் செமினாரியில் பயின்று வரும் அருட்சகோதரர் றோபின் அவர்கள் தற்போது நடைபெற்று வருகின்ற Home Day போட்டிகளில் முழு ஆர்வத்தோடு கலந்து கொள்வதாகவும். இவ்விழாவின் தலைவராக செயல்படுவதாகவும் கூறினார்.

**சிகிட்ச்சை**

முக்கூட்டுகல் தூய இளம் குருமடத்தில் களப்பணியாற்றும் அருட்சகோதரர் அஜூ கடுமையான மூட்டு வலியால் பாதிக்கப்பட்டு சிகிட்ச்சை பெற்று ஒய்வெடுத்து வருகிறார்.

**தியானத்தில் ஒருநாள்**

களப்பணியாற்றும் அருட்சகோதரர்களின் ஒருநாள் தியானமானது செப்டம்பர் மாதம் இளம் குருமடம் முக்கூட்டுகல்லில் வைத்து அருட்தந்தை ஜோஷி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அருட்தந்தை மேத்யு குழிஞ்ஞாலில் அவர்களால் மிக சிறப்பாக பயன்மிக்க தியானம் நடத்தப்பட்டது.

**திருத்தொண்டர்**

வடவாதூர் குருத்துவக் கல்லூரியில் திருத்தொண்டருக் குரிய கல்வியை நிறைவு செய்த திருத்தொண்டர் அபிலாஷ் அவர்கள் அக்டோபர் 20 அன்று மறைமாவட்டம் வருகை தந்தார்.

கல்லுவிளை சமூக சேவை சங்கம் சார்பில் எஜூ கேர் எனப்டும் ஏழை மாணவர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அக்டோபர் 23 முதல் 29 வரை நடைபெற்றது. இப்பயிற்சியை திருத்தொண்டர் அபிலாஷ் அவர்கள் தலைமையில் அருட்சகோதரர்கள் சிறப்புற நடத்தினர்.

அக்டோபர் 29 ஆயர் அவர்கள் களப்பணியாற்றும் அருட்சகோதரர்களை சந்தித்து இரண்டாம் பகுதி களப்பணிக்கான இடம் மாற்றங்களை தெரிவித்தார்.

சென்னை கவரப்பேட்டை குருத்துவக்கல்லூரியில் பயின்றுவரும் அருட்சகோதரர் மகேஷ் அவர்களை செப்டம்பர் மாதம் மறைமாவட்ட இளைஞர் இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் சந்தித்து ஊக்கமளித்தார். சென்னையில் பயிலும் அருட்தந்தை அபின் பூவத்துமூட்டில் அவர்களும் சந்தித்தார்.

அருட்சகோ றோபின்|தலைவர்

# சீனாய் தியான இல்லம்

| மாதம் நடைபெற இருக்கும் சிறப்பு தியானங்கள் | | |
|---|---|---|
| **கண்விழிப்பு ஆராதனை** | அக்டோபர் 12 வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணி முதல் காலை 5.30 மணி வரை | வழிநடத்துபவர் **சீனாய் தியான குழு** |
| **ஜெபமாலை அபிஷேக தியானம்** | அக்டோபர் 19 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர் **சீனாய் தியான குழு** |
| **நோய்களிலிருந்து குணமளிக்கும் தியானம்** | அக்டோபர் 27 சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர் **சீனாய் தியான குழு** |

**மறைவட்ட அளவில் நடைபெறும் தியானங்கள்**

| நாள் | மறைவட்டம் | நடைபெறும் இடம் | நேரம் |
|---|---|---|---|
| அக்டோபர் 06 சனிக்கிழமை | பிலாங்காலை | FCC துறவற இல்லம் அழகியமண்டபம் | காலை 9.00 முதல் மதியம் 2.00 வரை |
| அக்டோபர் 13 சனிக்கிழமை | படந்தாலுமூடு | புனித தோமையார் ஆலயம் பளுகல் | காலை 9.00 முதல் மதியம் 2.00 வரை |
| அக்டோபர் 20 சனிக்கிழமை | மஞ்சாலுமூடு | புனித குழந்தை தெரசா ஆலயம் மஞ்சாலுமூடு | காலை 9.00 முதல் மதியம் 2.00 வரை |
| அக்டோபர் 20 சனிக்கிழமை | சூசைபுரம் | கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம் | காலை 9.00 முதல் மதியம் 2.00 வரை |

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச்செல்ல அன்பாய் அழைக்கிறோம்.

அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்
இயக்குநர்

# மறைமாவட்ட கல்வி நிறுவனங்கள்

## 1.வலியவிளை புனித ஜேம்ஸ் உயர்நிலைப்பள்ளி

விளையாட்டு போட்டி

23-08-2018 முதல் 29-08-2018 முடிய மண்டல அளவில் மாணவர்களுக்கான விளையாட்டு போட்டி பெதானி நவஜீவன் பள்ளியில் வைத்து நடைபெற்றது. அதில் நம் பள்ளியில் இருந்து 44 மாணவர்கள் கலந்து கொண்டு முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் பெற்றனர்.

**காமராஜர் விருது**

எம் பள்ளியில் சென்ற ஆண்டு (2017 - 2018) S.S.L.C பயின்ற மாணவி M.பெனிஷா காமராஜர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு ( 05-09-2018) அன்று ஆசிரியர் தின விழாவில் கல்வி அமைச்சர் மாண்புமிகு செங்கோட்டையன் அவர்கள் விருது வழங்கினார்கள்.

**ஆசிரியர் தின விழா**

05-09-2018 புதன்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு ரோஜா பூ கொடுத்து வாழ்த்துக்களை தெரி வித்தனர். மாணவி ரேணுகா வாழ்த்துரை வழங்கினார். அன்று பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை ஜோண்ஸ்லால் அடிகளார் எம் பள்ளிக்கு வருகை புரிந்து ஆசிரியர்களை வாழ்த்தி அவர்களுக்காக ஜெபித்து கேக் வழங்கி சிறப்பித்தார்.

**ஆசிரியர்கள் கூடுகை**

06-09-2018 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. அதில் அனைத்து ஆசிரியர்களிடமும் பின்தங்கிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அதிக கவனம் செலுத்தும் படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

**காலாண்டு தேர்வு**

10-09-2018 முதல் 22-09-2018 வரை காலாண்டு தேர்வு நடைபெற்றது.

## 2.திருக்குடும்ப மேல் நிலைப்பள்ளி முக்கூட்டுக்கல்

**ஆசிரியர் தினவிழா**

05-09-2018 அன்று காலை ஆசிரியர் தினவிழா பள்ளியில் கொண்டாடப்பட்டது. பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார். மேலும் தலைமையாசிரியை அவர்களும் மற்றும் திரு. ஜஸ்டஸ் ஆசிரியர் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாணவர்களும் ஆசிரியர்களுக்கு பூங்கொத்து கொடுத்து சிறப்பித்தனர்.

**காலாண்டு தேர்வு**

காலாண்டு தேர்வானது 10-09-2018 அன்று தொடங்கி 22-09-2018 வரை நடைபெறும். தேர்வானது நன்முறையில் நடைபெற்று வருகின்றது.

**சாரணர் சாரணியர் பயிற்சி**

திருவட்டார் கல்வி மாவட்ட அளவிலான 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான ஒரு நாள் சாரண சாரணியர் பயிற்சி முகாமானது விளவங்கோடு அரசு மேல் நிலை பள்ளியில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் நம் பள்ளியிலிருந்து 12 மாணவர்கள் கலந்துக் கொண்டனர். மேலும் ஆசிரியர்களுக்கான ஒருநாள் புத்தாக்க பயிற்சியானது 04-09-2018 அன்று ஆற்றூர் N. V. K. S மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்றது. நம் பள்ளியிலிருந்து திரு. ஜஸ்டஸ் ஆசிரியர் கலந்துக் கொண்டார்.

**ஆசிரியர்களுக்கான ஒருநாள் சுற்றுலா**

21-09-2018 அன்று ஆசிரியர்களுக்கான ஒருநாள் சுற்றுலா கழக்கூட்டம் மாஜிக் அகாடமியில் நடைபெற்றது.

**விளையாட்டுப் போட்டிகள்**

கல்வி மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நாகர்கோவில் அண்ணா மைதானத்தில் வைத்து நடைபெற்றது. நம் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு மாவட்ட அளவில் சாதனை படைத்தார்கள். மாநில அளவில் நடைபெறுகின்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துக் கொள்ள எம் பள்ளி மாணவர்கள் தகுதி பெற்றுள்ளார்கள்.

## 3. மார் மத்தேயு காவுகாட்டு நினைவு உயர்நிலைப் பள்ளி

**ஆசிரியர் தின விழா**

05-09-2018 அன்று பள்ளி தாளாளர் தலைமையில் ஆசிரியர் தினவிழா கொண்டாடப்பட்டது. அனைத்து ஆசிரியர்களும் கலந்துக் கொண்டார்கள். கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியர்களுக்கு பரிசும் வழங்கப்பட்டது.

**அறிவியல் கண்காட்சி**

07-09-2018 அன்று மரியகிரி அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற அறிவியல் கண்காட்சிக்கு 6 முதல் 10 வரை யிலான மாணவ மாணவியர் அழைத்து செல்லப்பட்டார்கள்.

**அஞ்சலி**

மூன்றாம் வகுப்பு பயிலும் கார்த்திகா என்ற மாணவி விடுமுறைநாளில் வீட்டிற்கு அருகிலுள்ள குளத்தில் தவறி விழுந்து மரணம் அடைந்த அன்றைய தினம் ஆசிரிய பெருமக்களும், தாளாளர், குருகுலமுதல்வர் ஆகியோர் மரண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். அடுத்த நாள் அனைத்து ஆசிரியர்களும் ரூ. 1000 மதிப்புள்ள உணவு பொருட்களும் ரூ. 500 மதிப்புள்ள போர்வையும் அவ்வீட்டிற்கு வழங்கப்பட்டது. மேலும் மாணவியின் ஓலை குடிசை மாற்றி கான்கிரீட் வீடு கட்டி கொடுப்பதற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றது.

**விண்ணப்பம்**

மௌனானா ஆசாத் கல்வி உதவி திட்டத்திற்கான 9 மற்றும் 10 வகுப்புகளில் படிக்கும் 12 மாணவியருக்கு பள்ளி சார்பாக விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது.

## 4. திருக்குடும்ப உயர்நிலைப் பள்ளி ஆறுகாணி

### ஆசிரியர் தினவிழா

செப்டம்பர் 5 அன்று மாலை 2.30 மணியளவில் தலைமையாசிரியை தலைமையில் நடைபெற்றது. மாணவி ஆன்சி பீகம் அனைவரையும் வரவேற்றார். அனைத்து ஆசிரியர்களும் மேடையில் அமரவைக்கப்பட்டு மாணவர்களால் மலர் கொத்து வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். மாணவர்கள் சார்பில் அனிஷா, சஜீஷ், பேபின்ஷியா, விஜே, காட்வின் ஆகியோரால் வாழ்த்துப்பாடல், வாழ்த்துரை, வாழ்த்து கவிதை வழங்கப்பட்டது. மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. தலைமையாசிரியர் சிறப்புரையாற்ற மாணவன் விஜனேஷ் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

### பெயர் பதிவு முகாம்

08-09-2018 அன்று தக்கலை மறைமாவட்டத்திற்கு உட்பட்ட B. ED பட்டதாரிகள் மற்றும் இதர ஆசிரியர் பயிற்சி பெற்ற பட்டதாரிகளுக்கான பெயர்பதிவு முகாம் நடைபெற்றது.

### முற்பகல்

பெயர்பதிவு முகாமானது முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு முற்பகல் காலை 10 மணி முதல் 12.30 மணி வரை நித்திரவிளை, மஞ்சாலுமூடு மற்றும் ஆறுகாணி ஆகிய மறைவட்டங்களை சார்ந்த பட்டதாரிகள் பதிவு செய்தனர்.

### பிற்பகல்

2.00 மணி முதல் 4.30 மணி வரை படந்தாலுமூடு , சூசைபுரம் மற்றும் தக்கலை பிலாங்காலை மறைவட்டங்களை சார்ந்த பட்டதாரிகள் பெயர் பதிவு நடைபெற்றது.

### பட்டதாரிகள்

பெயர் பதிவில் நமது மறைமாவட்டத்தை சார்ந்த சுமார் 170 பட்டதாரிகள் ஆர்வத்துடன் கலந்துக் கொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்தனர். மேலும் பெயர் பதிவின் போது சில கேள்விகள் அடங்கிய வினாதாள் ஒன்று தயாரிக்கப்பட்டு அவர்களிடம் வழங்கப்பட்டது. அதனை பட்டதாரிகள் பூர்த்தி செய்து அளித்தனர். பெயர் பதிவு முகாமானது 4.30 மணி அளவில் நிறைவுபெற்றது.

**மறைவட்டம் வாரியாக பங்கேற்றவர்களின் எண்ணிக்கை**

| மறைவட்டம் | எண்ணிக்கை |
|---|---|
| ஆறுகாணி மறைவட்டம் | 07 |

| | |
|---|---|
| மஞ்சாலுமூடு மறைவட்டம் | 58 |
| நித்திரவிளை மறைவட்டம் | 34 |
| படந்தாலுமூடு மறைவட்டம் | 21 |
| சூசைபுரம் மறைவட்டம் | 35 |
| தக்கலை பிலாங்காலை மறைவட்டம் | 15 |

**பாடம் வாரியாக பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை**

| பாடம் | எண்ணிக்கை |
|---|---|
| Tamil | 13 |
| English | 24 |
| Maths | 15 |
| Physics | 24 |
| Chemistry | 09 |
| Zoology | 21 |
| Botany | 09 |
| History | 18 |
| TTC | 16 |
| Econamics | 09 |
| PET | 02 |
| Other Subject | 10 |

**கேரளா வெள்ள நிவாரண உதவி**

கடந்த மாதத்தில் கேரள மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கேரளா மக்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாயினர். அவர்களுக்கு உதவும் பொருட்டு தக்கலை மறைமாவட்ட அனைத்து பள்ளிகளின் தாளாளர் அலுவலகத்திலிருந்து கேரள மக்களின் துயரநிலையை வெளிக்கொணரும் வகையில் குறும்படம் ஒன்று தக்கலை மறைமாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து பள்ளிகளுக்கும் கொடுக்கப்பட்டு அதை மாணவர்களுக்கு ஒளிபரப்பும் படி அறிவுறுத்தப்பட்டது. மேலும் கேரளா மக்களுக்கு உதவும் படி நிதி உதவி மற்றும் பொருள் உதவியும் கோரப்பட்டது.

**நிதி உதவி வழங்கிய கல்வி நிறுவனங்களின் விவரம்**

| SCHOOL | AMOUNT |
|---|---|
| St. Alphonsa college , Soosaipuram | 1,00,000.00 |
| A.P.J.M Matriculation School, Soosaipuram | 1,15,321.00 |
| St. Alphonsa Matriculation Hr. Sec. School Nagercoil | 6,00,000.00 |
| Holy Family High School Mukkuttukal | 8,000.00 |
| M.M.K.M High School Varuthattu | 10,392.00 |
| Sacred Heart Nursary & Primary School Pathukani | 3,130.00 |
| Sanjo English medium School Anayadi | 7,000.00 |
| Holy Family High School Arukani | 2,510.00 |
| St. Michaels Matric High School Kattathurai | 70,000.00 |
| St. Francis  Nursary & Primary School Mezhacode | 10,000.00 |
| Holy Family Primary School Arukani | 1000.00 |
| **TOTAL** | **9,27,353.00** |

அருட்தந்தை ஜோண்சிலால்
இயக்குநர்

---

**தகவல்கள்**

* அருட்தந்தை ஜோசப் தங்கச்சன் அவர்கள் சவுதி அரேபியாவில் புலம்பெயர்ந்து வாழும் கத்தோலிக்கர்களை சந்தித்து விசுவாசப் பயிற்சி அளித்து செப்டம்பர் 18 அன்று மறைமாவட்டம் திரும்பினார்.
* அருட்தந்தை ஷாஜன் நெட்டபொங்கு அவர்கள் ஐக்கிய நாட்டில் தனது இரண்டாண்டு இறைபணியை நிறைவு செய்து அக்டோபர் 3 அன்று மறைமவாட்டம் வருகை தர உள்ளார்.
* அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் தொலைநெறிக்கல்வி வழியாக சமூகவியல் துறையில் முதுகலை பட்டம் பெற்றுள்ளார்.
* மறைமாவட்ட நற்செய்திப்பெருவிழா 30 நவம்பர் முதல் 2 டிசம்பர் வரை நடைபெறும்.
* உரோமையில் பயின்று வரும் அருட்சகோதரர் ஷிஜோ அவர்கள் இருமாத விடுமுறையில் ஜெர்மனியில் இறைபணியாற்றும் அருட்தந்தை ஷாஜன் அவர்களுக்கு உதவி செய்து உரோமை திரும்பினார்.
* அருட்தந்தையர்கள் ஜிம்மி மற்றும் ஜெஸ்டின் ஆகியோர் விடுமுறைக்காக ஜெர்மனி சென்றுள்ளனர். அவர்களது வகுப்புகள் அக்டோபர் 3 அன்று ஆரம்பமாக உள்ளது.

# செங்கோட்டை செய்திகள்

**அருட்பணியாளர்களின் கூடுகை**

ஆகஸ்ட் 16 ஆம் தேதி எப்.சி.சி கன்னியர் இல்லத்தில் வைத்து மாலை 6.30 மணியளவில் அருட்பணியாளர்களின் கூடுகையானது நடைபெற்றது. கேரளாவில் மழை வெள்ளத்தால் தவிப்பவர்களுக்காக ஆராதனை மற்றும் ஜெப வேண்டுதல்கள் நடத்தப்பட்டன. அனைவரும் ஒன்றிணைந்து பங்கெடுத்தனர்.

**ஜெப கூடுகை சுந்தரபாண் டியபுரம்**

செங்கோட்டை மறைபரப்பு தளத்தின் ஒரு புதிய மறைத்தளமான சுந்தரபாண்டியபுரத்தில் உள்ள அன்னம்மாள் ஜோசப் குமார் குடும்பத்தின் இல்லற வெள்ளி விழாவானது ஆகஸ்டு 26 ஆம் நாள் செபக் கூடுகையின் போது கொண்டாடப்பட்டது. குடும்பத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஜெப வேண்டுதல்கள் நடத்தினர். அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினர். இக்கூடுகையில் அருட்தந்தை செபி மற்றும் செங்கோட்டை மறைபரப்பு தளத்திலுள்ள அருட்சகோதரிகளும் பங்கெடுத்தனர்.

**ஒருநாள் தியானம்**

செப்டம்பர் 08 சனிக்கிழமை, வாஞ்சி ஆலயத்தில் வைத்து ஒருநாள் தியானமானது நடைபெற்றது. காலை 10.00 மணியளவில் செபமாலையுடன் ஆரம்பமானது. டிவைன் தியான இல்லத்தை சேர்ந்த சகோ. ஜாண்சன், சகோ. பால்ராஜ் என்பவர்கள் இணைந்து தியான உரை வழங்கினர். மதிய உணவிற்கு பின் ஆராதனை மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. இறுதியில் புனித கன்னிமரியாவின் பிறப்பு திருவிழாவினை ஒட்டி ஆடம்பர கூட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

**மிஷன் லீக் ஒருநாள் கருத்தரங்கு**

செங்கோட்டை மறைபரப்பு தளத்தில் உள்ள சிறுமலர் மிஷன் லீக் உறுப்பினர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கானது 06-09-2018 அன்று புளியரை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை ராஜேஷ் எம். சி. பி. எஸ் அவர்கள் அனைத்து உதவிகளையும் செய்தார். அருட்சகோதரி ஜென்னி அவர்கள் அதை பொறுப்பேற்று நடத்தினார். அருட்தந்தை செபி அவர்கள் திருப்பலியோடு இணைந்து திருப்பலியின் மறை உண்மைகளை எடுத்துக் கூறி திருப்பலி அர்ப்பித்தார். பின் வகுப்புகள் நடத்தப்பட்டன. பின் மிஷன் லீக் உறுப்பினர்களை 5 குழுக்களாக பிரித்து ஒவ்வொரு அருட்சகோதரர்களுடன் இணைத்து வீடு சந்திப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இறுதியில் அனைவரும் ஒன்று சேர்ந்து நன்றி கூறி இறை ஆசீருடன் வீடு திரும்பினர்.

**ஆயர் சந்திப்பு**

செப்டம்பர் 16 ஆம் தேதி ஆயர் அவர்கள் புளியரை பங்கில் திருப்பலி அர்ப்பித்து பங்கு மக்களை சந்தித்து பேசினார். அதன்பின்பு மேக்கரை கோலிக்றோஸ் கன்னியர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற கூடுகையில் பங்கெடுத்தார். மதியம் 12 மணியளவில் ஆராதனையுடன் ஆரம்பமானது. மதிய உணவிற்கு பின் அனைவரும் ஆயருடன் ஒன்றிணைந்து செங்கோட்டை மறைபரப்பு தளத்தின் பணிகளை பற்றி எடுத்துக் கூறினார். பக்த இயக்கங்களின் பொறுப்பாளர்கள் அதன் இவ்வாண்டு செயல் முறை திட்டத்தை அனைவர் முன்னிலையிலும் எடுத்துக் கூறினர். அதனை பற்றி கலந்துரையாடப்பட்டது. மழைக் கெடுதியில் தவித்த மக்களுக்கு ஏராளமான அளவில் உதவி செய்த செங்கோட்டை மறைபரப்பு தளத்திற்கு ஆயர் அவர்கள் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார். இறுதியில் இறை ஆசீருடன் கூடுகையானது நிறைவுபெற்றது.

---

## துறவறத்தார் சங்கமம்

மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கான துறவறத்தார் சங்கமம் செப்டம்பர் 29 அன்று பிலாங்காலையில் வைத்து நடைபெற்றது. இச்சங்கமத்தில் துறவற வாழ்வு மற்றும் முதல் வார்த்தைப்பாட்டில் பொன்விழா மற்றும் வெள்ளி விழா காணும் துறவறத்தார் கௌரவிக்கப்பட்டனர். இவ்வாண்டு பொன்விழா கொண்டாடும் அருட்சகோதரிகள் ஆக்னற்றா CMC, ஆனிலா FCC, பெனட் FCC, லிலிட் ஜாண் CMC, மரியா புரத்தில் SDS ஆகியோர்களும், வெள்ளிவிழா கொண்டாடும் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் sdb, அருட்தந்தையர்கள் லூக்கா கொல்லம்பறம்பில் CMI, ஜியோ சூழிக்குந்நேல், குரியன் கோயிப்புறம், அருட்சகோதரிகள் ஆன்சி கரிங்காடு SABS, சிசி மரியா FCC, எல்சி FDSHJ, விமலா ஜோஸ் CHF ஆகியோர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை அருட்தந்தையர்கள் தோமஸ் தெக்கேதல மற்றும் ஆன்றோ றாபின் ஆகியோர் ஏற்பாடு செய்தனர். அருட்தந்தை ஜினு தெக்கேதல அவர்கள் ஒருங்கிணைத்தார்.



# மறைவட்ட செய்திகள்




## சூசைபுரம் மறைவட்டம்

**மாங்கரை**

02.09.2018 அன்று 2.30 மணிக்கு பங்குபேரவை கூட்டம் நடைபெற்றது. மாதா பிறந்தநாளை முன்னிட்டு 03.09.2018 முதல் 08 .09.2018 வரை குருசடியில் சிறப்பு ஜெபமாலை நடைபெற்றது. இறுதிநாள் ஆடம்பர திருப்பலியுடன் நிறைவுபெற்றது. 09082018 அன்று அருட்தந்தை பிரின்ஸ் தலைமையில் கோட்டவிளை உறவிய ஆண்டுவிழா நடைபெற்றது. 16.09.2018 அன்று வாழிப்பிலாவிளை உறவிய ஆண்டுவிழா நடைபெற்றது. குழந்தைகளுக்கான பார்லிமெண்ட் கூட்டம் நடைபெற்றது. 23.09. 2018 அன்று பங்கு பொதுமன்றம் நடைபெற்றது.

**பாலப்பள்ளம்**

23.09.2018 அன்று பங்குதந்தை தலைமையில் பொதுமன்றம் நடைபெற்றது. நவம்பர் மாதத்தில் திருவிழா நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

**கிள்ளியூர்**

புனித தேவ மாதா ஆலயத் திருவிழா 30.08.2018 அன்று மாலை 6.30 மணிக்கு பங்குதந்தை பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் திருக்கொடியேற்றுதலுடன் ஆரம்பமானது. 02.09. 2018 அன்று அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி அருளடையாளங்கள் வழங்கினார். 07.09.2018 அன்று மாதா தேர்பவனி மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிறைவு நாளாகிய 09.09.2018 அன்று பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் இராசாத் திருப்பலி நிறைவேற்றினார். மாலை 6.00 மணிக்கு மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது. அனைவருக்கும் சமபந்தி விருந்து வழங்கப்பட்டது. 10.09.2018 அன்று இறந்தோர்கள் நினைவு திருப்பலியுடன் திருவிழா நிறைவடைந்தது.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

*ஆகஸ்டு 15 ஆம் தேதி மாதாவின் விண்ணேற்பு மற்றும் சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது.

*ஆகஸ்டு 19 அன்று ஆலய பங்குதந்தை அருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்களின் பெயர் கொண்ட திருநாள் மறைக்கல்வி மாணவர்கள், இளையோர்கள் மற்றும் பங்குமக்கள் ஆகியோரால் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

*21-08-2018* அன்று *KKSSS* இன் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. அதில் பங்கு மக்கள் கலந்து கொண்டு

பயன்பெற்றார்கள்

*23-09-2018* முதல் *30-09-2018* வரை ஆலய திருநாள் கோலாகலமாய் கொண்டாடப்பட்டது.

**தெற்றிவிளை**

புனித மிக்கேல் அதிதூதர் ஆலய திருநாள் *28-09-2018* முதல் *30-09-2018* வரை நடைபெற்றது.

**முழுக்கோடு**

கேரளா மக்களின் பண்டிகையாம் ஒண பண்டிகை இளைஞர்களால் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆலய வளாகத்தில் அத்தப்பூ போட்டு ஊஞ்சல் கட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். பின்னர் அனைவருக்கும் இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.

## நித்திரவிளை மறைவட்டம்

**முஞ்சிறைஅன்பகம்**

*30-09-2018* அன்று முஞ் சிறை முதியோர் இல்லத்தை சந்தித்து தங்கள் மகிழ்ச்சியை அவர்களோடு பகிர்ந்து மகிழ்ந்தனர். கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. வாழ்த்துரை மற்றும் சிறப்புரை வழங்கப்பட்டது. சகோ. புஷ்பம் நன்றி கூற விழா இனிதே நிறைவுபெற்றது.

**பிறப்பு திருநாள்**

மாதாவின் பிறப்பு நாள் *08-09-2018* அன்று காலை திருப்பலி, ஜெபமாலை பவனியுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும் வயலின்கரை, வாறுதட்டு, ஆகிய பங்குகளிலும் ஜெபமாலை, திருப்பலி, பவனிகள் நடைபெற்றன.

**சீனிவிளை**

*03-09-2018* முதல் *09-09-2018* வரை கறைதிரையற்ற அன்னையாம் அமலமரியாவின் திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. *03-09-2018* அன்று மாலை 6.00 மணிக்கு பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் திருக்கொடியேற்ற அருட்தந்தை வினு *D* ஜோசப் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்.

**நற்செய்தி பெருவிழா**

2, 3, 4 ஆகிய தேதிகளில் சீனாய் நற்செய்திக் குழுவின் நற்செய்தி பெருவிழா கொண்டாடப்பட்டது. 5 ஆம் நாள் இறந்தவர்களுக்கான திருப்பலி மற்றும் உறவிய ஆண்டுவிழாவும் நடைபெற்றது.

**நிகழ்வுகள்**

6 ஆம் நாள் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி மற்றும் அன்னையின் தேர் பவனியும் நடைபெற்றது. 7 ஆம் நாள் காலை 10 மணிக்கு இராசா திருப்பலி அருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள் தலைமையில் சிறப்பிக்கப்பட்டது. தொடர்ந்து அன்பின் விருந்து வழங்கப்பட்டது. மாலை 6.00 மணிக்கு ஜெபமாலை திருக்கொடியிறக்குதல் மற்றும் பக்த சங்கங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது.

**தகவல்:** திருமதி செலின் மேரி|திருமதி ஸ்னேக லதா|திருமதி ஹேமா

## BISHOP'S ENGAGEMENTS OCTOBER 2018

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1-5 | Mon | - | Sangamam: Annual Retreat for fathers |
| 5 | Fri | 7.30 | >> Quilandi, Kozhicode |
| 6 | Sat | | Quilandi: Requiem Holy Qurbana >> Thuckalay |
| 7 | Sun | 01.30 pm | Padanthalumoodu: CML Rally |
| | | 04.30 pm | Padanthalumoodu: Blessing of Chrisma and Pulari enterprises show room |
| 8 | Mon | 11.00 am | Munchirai: Anniversary Holy Qurbana at Anbaham convent |
| 9 | Tue | 06.00 pm | Family gathering at CTC convent |
| 10 | Wed | 09.30 am | Curia meeting |
| 11 | Thu | - | Bishop's house |
| 12 | Fri | 07.05 am | Trivandrum >>>Chennai >>Guwahati |
| 13 | Sat | 09.30 am | Guwahati: Meeting with Don Bosco University VC |
| 14 | Sun | - | Guwahati: Meeting with Archbishop and provincial |
| 15 | Mon | 02.00 pm | Kokrajar: Solomn Church blessing |
| 16 | Tue | 11.30 am | Guwahati >>>Hyderabad >>Trivandrum >> Thuckalay |
| 17 | Wed | 10.00 am | Bishop's house: Inter departmental meeting |
| | | 04.00 pm | Meeting with FCC Novices |
| 18 | Thu | 05.00 pm | Visit to Shenkottai and Thirunelveli Mission |
| 19 | Fri | 10.00 am | Sangamam: Pastoral council Meeting |
| | | 05.00 pm | Meeting with regency brothers |
| 20 | Sat | 09.30 am | Pilankalai: Vestition and First Religious profession of FCC novices |
| 21 | Sun | 04.00 pm | Bishop's House: Visit of Mr. Shaji from UK |
| | | 06.00 pm | Thuckalay: Chain Rosary in Families |
| 22 Oct - 8 Nov | | | Europe visit |
| 8 Nov. | Thu | 10.00 am | Mukkoottukal: Holy Family School Golden Jubilee celebration |

Rev. Fr. Shoji Puthenpurackal

Bishop's Secretary



Blessing - Deva Matha Garments Export Unit
- Killiyoor, 24.09.2018



Priests Religious Sangamam




St. Vincent-de-Paul, Golden Jubilee
Palappallam, 16.09.2018

His Excellency
Mar George Rajendran sdb,
First Profession
(Jubilee Begins)



JUBILARIANS:

Fr. Geo Choozhikunnel, Fr. Kurian Koipuram,
Fr. Luka Kollamparampil CMI, (1st Profession),
Sr. Agnetta CMC, Sr. Anila FCC, Sr. Bennet FCC, Sr. Lillit John CMC,
Sr. Marya Purathil SDS, Sr. Ancy Karingadu SABS,
Sr. Cicy Mariya FCC, Sr. Elsy FDSHJ, Sr. Vimala Jose CHF.

---

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570